# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

21.10.2024


## 43. போதுமென்ற மனதிருப்தி, தேவசித்தம் செய்பவர்களுக்கு சொந்தம்!

**பூ**ர்த்தி செய்யமுடியாத ஆசையைத் தங்களுக்குள் வைத்திருக்கும் யாராயிருந்தாலும், அவர்கள் ஒருக்காலும் திருப்தி அடையவே மாட்டார்கள்! தேவ சித்தத்திற்குள் தங்கள் சுயசித்தத்தை இழந்தவர்கள் தவிர, மற்ற எல்லா ஜனங்களுக்குள்ளும் "பேராசை" என்ற கொடிய குணம் குடிகொண்டிருக்கிறது. சிலர், கர்த்தருக்கென்று பாடுபட்டு இரத்தசாட்சியாய் மரிக்கவேண்டும் என்ற நல்ல ஆசையைக் கொண்டிருக்கிறார்கள்! சிலர், தங்கள் அயலகத்தார் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற தீராத வாஞ்சை கொண்டவர்களாய் இருக்கிறார்கள்! இன்னம் சிலர், தேவனுடைய மகிமையையே தங்கள் கண்களால் கண்டுவிட வேண்டும் என தவியாய் தவிக்கும் விருப்பம் கொண்டிருக் கிறார்கள்! இவையாவும் மிக அற்புதமான நல்ல விருப்பங்களே யாகும். ஆனால்.... தேவனுடைய சித்தத்தில் அமர்ந்து விட்டவர்களோ, இதுபோன்ற விருப்பங்கள் அவர்களுக்கு இல்லாதிருந்தும்கூட, சொல்லொண்ணா திருப்திகொண்டவர்களாய் வாழ்ந்து.... எத்தனையோ மடங்கு அதிகமாய் தேவனை மகிமைப்படுத்தவும் செய்வார்கள்!!

– ரத்னம்